# மெட்ரோ ரயில்: ஓ.எம்.ஆரில் மண் பரிசோதனை

சோழிங்கநல்லூர், ஆக. 21-

சென்னை, மெட்ரோ ரயில் திட்டத்தில், மாதவரம் – சிறுசேரி, 'சிப்காட்' பாதைக்கு, ஓ.எம்.ஆர்., சாலையில், மண் பரிசோதனை நடைபெற்று வருகிறது.

சென்னை மெட்ரோ ரயில், 2வது திட்ட பணிக்காக, 85 ஆயிரம் கோடி ரூபாயில், மூன்று வழித்தடங்களில், 107.55 கி.மீ., துாரத்தில் பாதைகள் அமைக்கப்பட உள்ளன.

மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 45.81 கி.மீ., துாரத்தில் ஒரு பாதையும்; மாதவரம் – சோழிங்கநல்லுார் இடையே, 44.62 கி.மீ., துாரத்தில் மற்றொரு பாதையும்; கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 17.12 கி.மீ., துாரத்தில் மூன்றாவது பாதையும் அமைக்கப்பட உள்ளது.

இந்த பாதையில், 930 மீட்டர் இடைவெளியில், 116 நிலையங்கள் கட்டப்பட உள்ளன.

இத்திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்தும் பணியும், வேகமாக நடைபெற்று வருகிறது.

மாதவரம் – சிறுசேரி சிப்காட் பாதைக்கு, ஓ.எம்.ஆர்., சாலையில், 6 மீட்டர் ஆழத்தில் மண் எடுத்து, பரிசோதனை செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

துரைப்பாக்கம், சோழிங்கநல்லுார் இடையே, நிலையங்கள் அமையும் இடங்களில், சாலை ஓரம் மண் எடுத்து பரிசோதனை செய்யப்படுகிறது.

அடுத்த கட்டமாக, சோழிங்கநல்லுாரில் இருந்து, சிறுசேரி வரை, மண் பரிசோதனை செய்யப்பட உள்ளது. அந்த பணி முடிந்ததும், துாண்கள் அமையும், சாலை மையப் பகுதியில், மண் பரிசோதனை நடைபெற உள்ளது.

ஓ.எம்.ஆர்., சாலை, வாகன நெரிசல் அதிகமுள்ள சாலையானதால், போக்குவரத்து போலீசார் அனுமதிக்கு பின், சாலை மைய பகுதியில், மண் பரிசோதனை நடைபெற இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.




ஓ.எம்.ஆர்., சாலையில் மண் பரிசோதனை நடைபெறுகிறது. இடம்: துரைப்பாக்கம்.